மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண்.247/2021

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : ராஜசேகர்(.வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

31.01.2024

வாதி தரப்பு சாட்சி 1 மீண்டும் அழைத்ததின் பேரில் 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

1. 2ம் வாதி ராதாகிருஷ்ணன் எனக்கு உறவுமுறை கிடையாது. பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர். பிரதிவாதி செல்வமோகன், ராமசந்திரன் எனது உறவினர் கிடையாது. ஊரில் குடியிருக்கிறார். செல்வமோகன், ராமச்சந்திரன் தாவா இடத்திற்கு அருகில் வீடு உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை 1, 2 பிரதிவாதிகள் புழங்கி வரவில்லை . திடீரென்று ஆக்கிரமிப்பு செய்தார்கள். தாவா இடத்தில் 1, 2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து மாடு கட்டினார்கள். 1,2 பிரதிவாதிகள் தாவா இடத்தை பயன்படுத்துவதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் தாக்கல்செய்துள்ளேன். தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லை. தாவா இடம் அரசு காலி இடமாக அரசு ஆவணங்களில் இருந்து வருகிறது என்றால் சரிதான். 50 ஆண்டுகளுக்கு மேலாக கிராமத்தில் பொதுமக்கள் விசேசங்கள் தாவா சொத்தில் நடத்தி வருகிறார்கள் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. நானும் 2ம் வாதியும் கிராம பிரதிநிதிகள் இல்லை என்றால் சரியல்ல. கிராம பொதுமக்கள் கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். சர்வே எண் 23/61 அரசு நிலம் ஆகும். சர்வே எண் 23/22 அரசு நிலம் ஆகும். நான் முறைப்படி வட்டாட்சிரியடம் சரியான முறையில் அக்கிரமிப்பை தடுப்பதற்கு மனு கொடுக்கவில்லை என்றால் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேன் அம்மாவட்ட ஆட்சியர் வட்டாட்சியருக்கு நடவடிக்கை எடுக்க மனுவை பரிந்துரைத்தார்.

வட்டாட்சியர் தாவா இடத்தை பார்வையிட்டு நடவடிக்கை எடுப்பதாக கூறினார். பொது மக்களுடைய நலனுக்கு நானும் 2ம் வாதியும் விரோதமாக செயல்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல. கிராம பொதுமக்களை தூண்டிவிட்டு வீண்கலகம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. 3 முதல் 5 பிரதிவாதிகள் அரசு அதிகாரிகள் என்பதால் முன் அறிவிப்பு கொடுக்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

2. இல்லை.